**ஹல்தும்முள்ள பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹல்தும்முள்ள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு ரூபா 1,656,301 தொகை எனினும், அது ரூபா 1,689,251 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் பொறுப்புக்கள் ரூபா 32,950 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 150,443 தொகை எனினும், அது ரூபா 199,701 தொகை என நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தியிருந்த காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 49,258 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பலவின கடன்கொடுத்தோர் ரூபா 210,787 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் ரூபா 5,615,608 தொகை எனினும், அது நிதிக் கூற்றுகளில் ரூபா 4,743,739 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் ரூபா 871,869 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,044,134 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,140,644 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் ரூபா 96,510 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 4,705,619 தொகைக்கான 03 கணக்கு விடயங்களுடன் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்களில் கூட்டுத்தொகை ரூபா 624,699 தொகையாக இருந்தன.

**1.3.3 பெற வேண்டியமற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,493,640 தொகைக்கான பெறவேண்டிய கணக்கு மீதியில் 02 வருடங்கள் கடந்துள்ள நிலுவை வீதவரி ரூபா 248,327 தொகை நிலுவை மூலதன ஏற்பாடுகள் ரூபா 14,752,785 தொகை, 03 வருடங்களை உடைய நிலுவை ஏனைய வருமானங்கள் ரூபா 3,072,524 தொகை மற்றும் 08 வருடங்களை உடைய நிலுவை கடை வாடகை ரூபா 699,770 தொகை, 02 வருடங்களை உடைய நிலுவை அனுமதிப் பத்திர கட்டணம் ரூபா 60,509 தொகை, நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 398,972 தொகை, ஒரு வருடத்தை கடந்துள்ள நிலுவை ஏக்கர் வரி 154,074 தொகை, நிலுவை கடை வாடகை ரூபா 3,100 தொகை, நில வாடகை ரூபா 103,579 தொகை அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,073,785 தொகைக்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடத்தை உடைய கடன்கொடுத்தோர் ரூபா 131,122 தொகை, 05 வருடங்களை உடைய நிர்மாண கடன்கொடுத்தோர் ரூபா 17,253,412 தொகை மற்றும் 25 வருடங்களையுடைய ஓய்வூதிய கடன் கொடுத்தோர் ரூபா 1,689,251 தொகை அடங்கியிருந்தன.

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இண்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 59,229,132 தொகைக்கான 03 கணக்கு விடயம் ஒன்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1980 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் திருத்தப்பட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம். | 56,000 | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டிய 14 வியாபாரங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி கோவை<br>விதி 164 | | செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சபையின் கணக்கு ஏடுகள் மற்றும் ஆவணங்கள் நாளாந்த பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (இ) | 2008 ஜனவரி 25 ஆம் திகதி 1533/16 ஆம் இலக்க வர்த்த மானி அறிவித்தல் | 16,800 | சபையின் அதிகார பிரதேசத்தில் செயற்பட்ட 06 வர்த்தகங்களுக்கான 2017 ஆண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கி வருமானம் உழைத்திருக்க வில்லை. |
| (ஈ) | 1988 இன் திசெம்பர் 31 திகதியில் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சந்தையின் கடைகளுக்காக மாதாந்த வாடகை அரச பெறுமதி மதிப்பிட்டாளர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும், சபைக்கு சொந்தமான 37 கடைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,389,311 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,080,555 தெகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்ற

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 2,415,070 | 2,154,860 | 1,937,507 | 553,423 | 2,195,364 | 2,145,432 | 1,586,925 | 598,282 |
| (ii) வாடகை | 1,689,520 | 802,920 | 1,444,603 | - | 1,453,760 | 800,490 | 1,499,880 | - |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 498,100 | 490,730 | 565,130 | - | 946,200 | - | 715,780 | - |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 3,860,000 | 6,884,384 | 2,432,850 | 4,642,666 | 4,115,000 | 6,451,282 | 3,731,594 | 2,719,688 |
| மொத்தம் | 8,462,690 | 10,332,894 | 6,380,090 | 5,196,089 | 8,710,324 | 9,397,204 | 7,534,179 | 3,317,970 |
| | ======== | ======== | ======== | ======== | ========= | ========= | ========= | ======== |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 10 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 6.3 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும், வருட இறுதியிலும் ரூபா 5 மில்லியன் வருமானம் ஒன்றினை சேகரிப்பதற்கு முடியுமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 57 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வாடகை

வருடாந்த அனுமதிப் பத்திரங்களுக்காக கட்டணம் அறவீடு செய்வதற்காக கட்டண அறவீடு செய்வதற்காக முறைசார் விதமாக துணை விதிகள் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்திருக்கவில்லை. சபையின் தீர்மானங்களின் பிரகாரம் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்காக வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக ரூபா 600 அறவிடப்பட வேண்டுமெனினும், சபையில் பதிவு செய்துள்ள 87 முச்சக்கர வண்டிகளுக்காக கட்டண அறவிடப்படாமையால் ரூபா 52,200 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

#### (அ) விளம்பர பலகை வருமானம்

சபையின் அதிகார பிரதேசத்தில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக 1998 ஆகஸ்ட் 23 திகதி 520/7 ஆம் இலக்க துணை விதியின் 39 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 திசெம்பர் 02 திகதி 1996 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும் தெரிவு பரிசோதனை படி ரூபா 112,500 இற்கான விளம்பரப் பலகை வருமானம் ஒன்றின் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) நீர் கட்டணம்**

04 குடிநீர் திட்டங்களில் 141 நீர் நுகர்வோர்களுக்கு வழங்கியிருந்த நீர்மானிகள் செயற்படாமையின் காரணத்தினால் ஒரு மாதத்திற்கு ரூபா 100 இற்கான சராசரி நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், நீர் மானிகள் பொருத்தப்பட்டு நுகர்வு அலகுகளின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,937,664 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,101,599 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்றன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

1987 பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் பிரகாரம் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனினும், 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு 22 துணை விதிகள் மாத்திரம் ஆக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

2012 அக்தோபர் 05 திகதி 1178/45 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சபையினால் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் மீதான துணைவிதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது குப்பை வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதன் காரணத்தினால் சபை ரூபா 50,000 வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**(அ) தீர்க்கப்படாத முற்பணங்கள்**

(i) 1994 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் முற்பணம் ரூபா 271,110 தொகை 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை.

(ii) 2014 ஆண்டின் போது கிதுல்கஹ அறாவ கிராம அமைப்பிற்கு வழங்கியிருந்த ரூபா 210,000 தொகையான நிர்மாண வேலை முற்பணம் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை.

**(ஆ) கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரித்தல் மற்றும் இசைவு சான்றிதழ் வழங்குதல்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 49 மற்றும் 52 இன் பிரகாரம் பிரதேச சபை எல்லையிலுள்ள அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை பரிசோதனை செய்து சட்ட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சபையின் ஆவணங்களின் பிரகாரம் சபையினால் எல்லையில் 2012 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை 105 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 25 இணக்க சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) கொஸ்லந்த வர்த்தக தொடர் கட்டிடம் நிர்மாணித்தல்**

சபையினால் உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் மற்றும் சபையின் நிதியத்தை பயன்படுத்தி ரூபா 6,665,665 தொகை செலவிடப்பட்டு 2010 ஆண்டின் போது கொஸ்லந்த வர்த்தக தொடர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. வர்த்தக தொடர் கட்டிடத்திற்கு நுழைபாதை தயாரித்திருக்காமையினால் 2017 திசெம்பர் அளவிலும் கட்டிடம் பயன்படுத்தாமல் காணப்பட்டதுடன், சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த இலாபத்தை இழந்துள்ளது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) பதவியணி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 வெற்றிடங்கள் மற்றும் 20 மிகைகள் காணப்பட்டன.

**(ஆ) பதவியணிக் கடன்**

சபையில் இருந்து சேவையை விட்டு சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதி ரூபா 25,220 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) சொத்துக்கள் மூலம் கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ளாமை**

2017 ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப் பகுதியில் சபைக்கு சொந்தமான இரண்டு நடைமுறை கணக்குகளில் ரூபா 4,665,755 முதல் ரூபா 8,042,651 தொகை வரையான மீதி ஒன்று காணப்பட்ட போதிலும் இந்த மிகைப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்தி ரூபா 500,393 இற்கான வட்டி வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) உரித்தாக்கப்பட்டாத காணிகள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 பிரிவின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மயானங்களை அளவை செய்து பராமரிக்க வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான 35 ஏக்கர்களை கொண்ட 38 மயானங்கள் காணப்பட்ட போதிலும் அந்த மயானங்களுக்கான காணி உறுதிகள் / சாட்டுதல் கட்டளைகள், அளவை கட்டளைகள் மற்றும் எல்லைகளை வேறாக்கி காணிப் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது சபையின் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2017 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தியிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துக்களின் கிரயம் கணக்கீடு செய்யாமை. |
| | (ii) மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த பேரேட்டில் பதிவு செய்தல் வழுக்கள் காணப்படல். |
| | (iii) கணிப்பீட்டின் மூலம் இனங்கண்டிருந்த காணிகள், நிர்மாண வேலைகள் மற்றும் கட்டிடங்கள் ஆவணப்படுத்தாமை |
| | (iv) கணக்கு விடயங்களின் பெறுமதி ஒன்றிற்கு ஒன்று இணங்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | வழங்கள் கட்டளைகள் மற்றும் பெறுவனவு பத்திரங்கள் பயன்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | ஒப்புப் பிரதி புத்தகம் வழங்கும் பதிவேடு பேணப்படாமை. |
| (இ) | ஒப்பந்த வேலை நிருவாகம் | (i) | ஒப்பந்தவேலை பதிவேடு பேணப்படாமை. |
| | | (ii) | நிர்மாணவேலை கோவைகள் பேணப் படாமை. |
| (ஈ) | கடன் கட்டுப்பாடு | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்யாமை. |
| | | (ii) | நிலுவை வருமானப் பதிவேடு பேணப்படாமை |
| (உ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை |
| | | (ii) | நிலையான சொத்துக்கள் கணிப்பீடு செய்யாமை. |